# Path to Dharma

தர்ம நெறி ஓம் ධර්ම මාර්ගය

News Letter **4** செய்தி மடல்



க்ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம்,
ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.

**Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**

ශ්‍රී ගණ දෙවි දේවාලය (වෙලේ), මුන්නේස්සරම, හලාවත, ශ්‍රීලංකා.


hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com

**Sri Sankar Publications**


April 2008 ஏப்ரல்

# Path to Dharma

தர்ம நெறி ॐ ධර්ම මාර්ගය



## News Letter 4 செய்தி மடல்



## க்ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம், ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.

Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.
ශ්‍රී ගණ දෙවි දේවාලය (වෙල්), මුන්නේශ්වරම, හලාවත, ශ්‍රී ලංකා.
hot mail: kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com

Sri Sankar Publications

April 2008 ஏப்ரல்

# News Letter - 4 -செய்தி மடல்

## Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.

க்ஷேத்திர(வயல்)விநாயகர் ஆலயம், ஸ்ரீ முன்னேஸ்வரம், சிலாபம், இலங்கை.
ශ්‍රී ගණ දෙවි දේවාලය (වෙලේ), මුන්නේස්සරම, හලාවත, ශ්‍රී ලංකා.
hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com
**Edited by: B.S.Sarma , Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**

இச் செய்தி மடல் 20.04.2008 அன்று சித்ரா பௌர்ணமி அன்று அக் கோயிலில் இடம் பெற்ற கலந்துரையாடலில் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விளக்கங்களைக் கொண்டது.அனைவருக்கும் பயன்படும்.

1. அருக்கியம் என்பது என்ன? எத்தனை வகைப்படும்?

பூஜைகளுக்கு அல்லது யாகங்களுக்கு உரிய திரவியங்களை இடது பக்கத்திலும், பரிசுத்தமான நீர் நிரம்பப் பெற்ற பாத்திரத்தை வலது பக்கத்திலும் வைத்தல் வேண்டும். ஆத்மபூஜைகள், ஆவரணபூஜைகள் செய்வதற்காகச் சேகரித்த திரவியங்களை, நீர் நிரம்பப் பெற்ற அருக்கியபாத்திரம், பாத்தியபாத்திரம், ஆசமனீயபாத்திரம் ஆகிய பாத்திரங்களில் சேகரித்த வைத்த திரவியங்களை கிரமப்படியாக இட வேண்டும். இதுவே அருக்கியம் எனப்படும்.

அருக்கியம் நான்கு வகைப்படும். அவை:-

1. சாமான்னியார்க்கியம்,(சாமான்னிய அருக்கியம்)
2. விசேஷார்க்கியம், (விசேஷ அருக்கியம்)
3. நிரோதார்க்கியம், (நிரோத அருக்கியம்)
4. பராங்முகார்க்கியம் (பராங்முக அருக்கியம்) என்பன.

i) சாமான்னியார்க்கியத்திற்கு எள்ளும் அரிசியும் திரவியங்களாம்.

ii) விசேஷார்க்கியத்திற்கு ஏலம், இலவங்கம், கற்பூரம், திம்பு, சாதிக்காய், முறம், நெல், எள் என்னும் எட்டு திரவியங்களாகும்.
அல்லது நீர், பால், தர்ப்பை நுனி, அரிசி, புஷ்பம், எள், கடுகு என்னும் ஏழு திரவியங்களாகும்.
அல்லது தர்ப்பை, அறுகு, எள், பால், ஜலம், கடுகு என்னும் ஆறு திரவியங்களாகும்.
அல்லது அறுகு, நெல், எள், பால், ஜலம், ஐந்து திரவியங்களாகும்.
அல்லது தருப்பை, கடுகு, ஜலம், எள் என்னும் நான்கு திரவியங்களாகும்.
அல்லது அறுகு, கற்பூரம், குங்குமமென்னும் மூன்று திரவியங்களாகும்.

iii) நிரோதார்க்கியத்திற்கு தர்ப்பை, அறுகு, யவை (யவம்- வால்நெல்) அரிசி, கடுகு என்னும் ஐந்தும் திரவியங்களாகும்.

iv) பராங்முகார்க்கியத்திற்கு மேற் கூறப்பட்ட ஐந்துடன் எள்ளுச் சேர்த்து ஆறும் திரவியங்களாகும்.

2. பாத்தியத்திற்கான திரவியங்கள் எவை?

பாத்தியத்திற்கு அறுகு, சந்தனம், கடுகு, இலாமிச்சவேர், குருவேர், குங்குமம் என்பவை ஆறு திரவியங்களாகும்.

3. ஆசமனத்திற்கான திரவியங்கள் எவை?

ஆசமனத்திற்கு ஏலம், இலவங்கம், கற்பூரம், சாதி, கோஷ்டம், திம்பு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், சந்தனம், இலாமச்சைவேர் என்பவை பதினொரு திரவியங்களாகும்.

4. இறைமூர்த்தங்களுக்கு அபிஷேகஞ்செய்ய வேண்டிய முறை என்ன?

இறைமூர்த்தங்களை எண்ணை வகை (தைல வகை), பசுநெய் என்னும் இவற்றிலொன்றால் தைலக்காப்புச் செய்வித்து, அரிசி மாப்பொடி முதலியவற்றால் சுத்திசெய்து, சிறிது வெந்நீரால் அபிஷேகஞ் செய்ய வேண்டும். பின்னர், பஞ்சகவ்வியத்தால் அபிஷேகஞ் செய்ய வேண்டும்.

அதன் பின்பு முறையாக பஞ்சாமிருதம், பழச்சாறு, கலந்த பஞ்சாமிருதம் முதலியவற்றால் மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு புஷ்பம், தூபம், தீபம் என்னுமிவற்றைச் சமர்ப்பித்து அஸ்திர மந்திரத்தால் மணி அடித்துக்கொண்டு அபிஷேகஞ் செய்ய வேண்டும்.

இவ்வாறு பழ ஜலம், பீஜோதகம், இரத்தினோதகம், கந்தோதகம், புஷ்போதகம் முதலியவற்றால் அபிஷேகஞ் செய்து, பின்னர் இளநீர், கருப்பஞ்சாறு சந்தனம், பன்னீர் முதலியவற்றால் அபிஷேகஞ் செய்ய வேண்டும்.

5. பழ ஜலம் என்பது என்ன?

பழ ஜலம் என்பது, தோலில்லாத பலா, தென்னை, தோலுடன் கூடின மாதுளம்பழ கொய்யாப்பழம், சுரபுன்னை, எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், மாம்பழம், வாழைப்பழம் என்னும் இவற்றுடன் கலந்த ஜலமாகும்.

6. பீஜோதக ஜலம் என்பது என்ன?

பீஜோதக ஜலம் என்பது, யவம், நீவாரம், நெல், பயறு, வெண்கடுகு, வாசனைத் திரவியங்கள், சுவர்ணம், சம்பாநெல் என்னும் இவற்றுடன் கூடின நீராகும்.

7. இரத்தினோதக ஜலம் என்பது என்ன?

இரத்தினோதக ஜலம் என்பது, ஸ்படிகம், நல்முத்து, மாணிக்கம், பவளம், கோமேதகம், புஷ்பராகம், கருடப்பச்சை, இந்திர நீலக்கல் என்னும் இவற்றுடன் கூடியநீர்.

8. கந்தோதக ஜலம் என்பது என்ன?

கந்தோதக ஜலம் என்பது, சந்தனம், அகில், கஸ்தூரி, குங்குமப்பூ, கற்பூரம், மனோசிலை, ஏலம், கீழாநெல்லி, தக்கோலம், இலவங்கம், இலாமிச்சம்வேர் செண்பகமொட்டு ஆகியவற்றின் பொடி யுடன் கூடின நீராகும்.

9. புஷ்போதக ஜலம் என்பது என்ன?

புஷ்போதக ஜலம் என்பது, மல்லிகை, தாழம்பூ, பாதிரி, முல்லை, சுரபுன்னை, ஜாதி (பிச்சி) மந்தாரம், அலரி, தாமரை, நீலோத்பலம், சம்பங்கி, பூமாதுளை, சண்பகம், அசோகம், மனோரஞ்சிதம், நந்தியாவர்த்தம், கிரிமல்லிகை என்னும் இவற்றுடன் கூடினதாயும், வெட்டிவேர் வேருடன் கூடினதாயும் உள்ள நீராகும்.

**10. அபிஷேக சங்குகளிலும் கலசங்களிலும் நீரில் ஊற வைக்கப்படும் மூலிகைகளின் பொதுப் பெயர்களும், தாவர விஞ்ஞானப்பெயர்களும் என்ன?**

அபிஷேக சங்குகளிலும் கலசங்களிலும் நீரில் ஊற வைக்கப்படும் மூலிகைகளின் பொதுப் பெயர்களும், தாவர விஞ்ஞானப்பெயர்கள்( **(Botanical names of the plants used in Abhisheka Kalasa pot)** பின் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. கோஷ்டம் | :The Arabian Costus | 20. இஞ்சி | :Zingiberofficinale |
| 2. ஏலம் | :Elettaria cardamomum (seed) | 21. கடலை | :Cicer arietinum (seed) |
| 3. இலாமிச்சம்வேர் | :Andropogon muricatum (root) | 22. நாகசேகரம் | :Mesua ferrea |
| 4. கற்பூரம் | :Cinnamomum camphora | 23. தக்கோலம் | :Calyptranthes jambaeana |
| 5. சந்தணம் | :Santalum album (stem) | 24. கச்சோலம் | :Guilandina bonduc |
| 6. குங்குமப்பூ | :European Saffron (stamen) | 25. அகில் | :Aquila |
| 7. கோரோசனை | :Korochana | 26. மஞ்சள் | :Curcuma domestica |
| 8. கஸ்தூரி | :Musk of the 'musk deer' | 27. நெல்லிவற்றல் | :Emblica offcianalis |
| 9. தாமரைப்பூ | :Nelumbium nuciferum petal | 28. சீதேவியார் செங்கழுநீர்: | Vernonia cinera (leaf) |
| 10. அறுகு | :Cynodon dactylon | 29. மாதுளம்பழச்சாறு : | Punica granatum (fruit) |
| 11. வெண்கடுகு | :Sinapis niger | 30. தாளிக்கொடி | :Flacourtia cataphracta. |
| 12. யவை | :A kind of barly | 31. விஷ்ணுக்கிராந்தி | :Evolulus alsinodes |
| 13. கிராம்பு | :Eugenia caryophyllata | 32. பெருங்குமிழ் | :Gmeline tomentosa. |
| 14. பூலாங்கிழங்கு | :Poolan yam | 33. சாதிபத்திரி | :Myristica fragrans |
| 15. சண்பக மொட்டு | :Michelia champaca (flower) | 34. கறுவா | :Cinnamomum zeylanicum |
| 16. நெல் | :Oryza sativa (grain) | 35. அசோகம் | :Saraca indica(flower bud) |
| 17. எள் | :Sesamum indicum (seed) | 36. இலவங்கம் | :Cinnamomum cassia (bark) |
| 18. வில்வபத்திரம் | -Aegle marmelos (leaf) | 37. மிளகு | :Piper nigrum (dried fruit) |
| 19. கோரைக்கிழங்கு | -Cyperus juncifolius | 38. துளசி | :Ocimum sanctum(leaf) |

*11.* பஞ்சகவ்யம் தயாரிக்கும் முறை என்ன?

பஞ்சகவ்யம் தயாரிக்கும் முறை பின்வருமாறு:-

பஞ்ச கவ்வியத்தில் உள்ள பால் பகை நீக்கத்தையும், தயிர் புத்திர பாக்கியத்தையும், நெய் மோட்சத்தையும், கோசலம் லட்சுமி கடாட்சத்தையும், கோமயம் ஆரோக்கியத்தையும் தருவன.பஞ்ச கவ்யம் தயாரிக்கும் முறை பற்றி 'தர்மசாஸ்திரம்' என்ற நூலில் 'பலம்' என்ற நிறை அலகில் கூறப்பட்டுள்ளது. ஒரு பலம் என்பது மூன்று இந்திய வெள்ளிரூபா நாணயத்தின் நிறைக்குச் சமனாகும். பஞ்சகவ்யம் தயாரிக்கும் போது கோசலம் ஒருபலம், கோமயம் கைக்கட்டைவிரல்தடிப்பத்தின் பாதிஅளவு, பால் ஏழு பலம், தயிர் மூன்று பலம், பசுநெய், ஒருபலம்,தர்ப்பைச் சாறு ஒரு பலம் என்ற விகிதாசரம்தில் அமைய வேண்டும் எனக் கூறப்படுகிறது. பஞ்சகவ்வியம்தயாரிக்கும் போது உரிய மந்திர 'உச்சாடனம் செய்யவேண்டும். என விதிக்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் 'மாதனதை....' என்று ஆரம்பமாகும் தேவாரப்பாடலில் 'கோதனத்து ஐந்து' என்று பசுவின் மூலம் கிடைக்கப் பெறும் ஐந்து பொருட்களைத் தொகுத்துக் காட்டுகிறார்.ஹோமங்களின்போது பஞ்ச கவ்வியம் சேர்க்கப்பட வேண்டும் என்ற விதியும் உள்ளது.

*12.* அபிஷேகஞ் செய்வற்கான சந்தனம் பெற வேண்டிய முறை என்ன?

சுத்தமான பன்னீர் சேர்த்து அரைக்கப்பட்ட சந்தனம்இ கோரோசனைஇ குங்குமப்பூஇ ஏலம்இ பச்சைக்கற்பூரம்இ கருமையான அகில்இ கோஷ்டம்இ கஸ்தூரி என்பவை சமனான எடை(நிறை)யாகச் சேர்க்கப்பட்டவையாக இருக்க வேண்டும். அல்லது சந்தனம்இ அகில்இ

பச்சைக்கற்பூரம்இ குங்குமப்பூஇ இலாமிச்சைவேர் என்பவை சமனான எடையாக இருத்தல் வேண்டும்.

13 சந்தன வகைகள் யாவை?

தேவதாரு சந்தனம்இ தேவதாருவின் மரக்கட்டையால் உண்டான சந்தனம்.

வில்வச் சந்தனம்இதனி வில்வக்கட்டையால் உண்டான சந்தனம்

கொன்றைச் சந்தனம்,தனிக் கொன்றை மரக்கட்டையால் உண்டான சந்தனம்

வெள்ளை அகிற் சந்தனம் தனி வெள்ளை அகில் மரக்கட்டையால் உண்டான சந்தனம்

கருமையான அகிற் சந்தனம், தனிக் கருமையான அகில் மரக்கட்டையால் உண்டான சந்தனம்

குங்கும மரக்கட்டைச் சந்தனம், தனிக்குங்கும மரக்கட்டையால் உண்டான சந்தனம்

14. ருக்வேத, யுஜர் வேத,சாம வேத,அதர்வணவேத மந்திர சாரமான மகா வாக்கியம் என்ன?

ருக்வேத, யுஜர் வேத,சாம வேத,அதர்வணவேத மந்திர சாரமான மகா வாக்கியம் பின்வருமாறு:-

1. *"பிரக்ஞானம் பிருஹ்ம்" (மெய்யறிவே பிரும்மம்) - ருக்வேதமந்திர சாரம்*
2. *"அஹம் பிரம்மஸ்மி" (நானே பிரும்மம்) - யுஜர் வோத மந்திர சாரம்*
3. *'தத்வமசி" (அதுவே நீயாக இருக்கிறாய்) - சாம வேத மந்திர சாரம்*
4. *"அயமாத்மா பிரம்ஹம்" (இந்த ஆத்மாகவே பிரும்மம்) - அதர்வணவேத மந்திர சாரம்*

15、பூஜைக்குரிய பூக்கள் எவை?

கீழே விழுந்த மொட்டுகள் புஷ்பங்கள், சிதறிப்போனதும், நுகரப்பெற்றதும், துஷ்டஜந்துக்களினால் ஸ்பரிசிக்கப்பெற்றதும், சிலந்திப் பூச்சி (எட்டுக்காற் பூச்சி)யின் நூலால் சுற்றப்பெற்றதும், பழையதும், பூஜைக்குரியவை அல்ல.

பூஜைக்குரிய புஷ்பங்கள் வருமாறு :–
அலரி, அரலி, வெண்தாமரை, செந்தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், சம்பங்கி, கனகாம்பரம், மனோரஞ்சிதம், மாதுளை, பூமாதுளை, செவ்வந்தி, திருக்கொன்றை, நாகலிங்கம், தென்னை, புன்னை, பூவரசு, பாரிஜாதம், சண்பகம், சிறுசண்பகம், தும்பை, பெருந்தும்பை, கொன்றை, அசோகம், சுரபுன்னை, மந்தாரம், மருக்கொழுந்து, ஊமத்தை, நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், எருக்கு, வெள்ளெருக்கு, மகிழம், மருதாணி, நாகம், வெள்ளைலொத்தி, பலாசம், பாடலி, கர்ணிகாரம், கும்மட்டி, மருதம், மயிற்கொன்றை, தேவதாரு, முல்லை, பத்ரா, அபராஜிதம், குசும்பம், குங்குமம், மலைமல்லிகை, தருப்பை, நாயுருவி, கையாந்தரை, கமுகு, சரளம், மலையத்தி, மலைப்பூ, கடம்பம், மா, இலுப்பை, ஹேமாகுலி, குன்றி, நிலப்பனை, வேஜிகை, ஜாதிமல்லிகை, மல்லிகை, பட்டி, மாலதி, ரித்தி, நொச்சி, விஷ்ணுகிராந்தி, வெள்ளை விஷ்ணுகிராந்தி, வாழை, தாழை, நன்னாரி, தேவதாளம், த்விகண்டி, கிரந்தபர்ணி,வில்வம், கந்தபத்ரிகா, கொக்குமந்தாரை, வன்னி, சங்கம், கண்டங்கத்திரி, சதபத்ரா, மிளகு, நொச்சி, துளசி, கருந்துளசி, செந்துளசி, இந்திரவல்லி, கரும்பு, விஜயம், கதலி, ரித்தி (ஓஷதி), சகதேவி, நாக தந்தி, பாதிரி, மகிழம், இலுப்பை, நாகம், சூரியாவர்த்தம், சிங்க கேசரம், நாக கேசரம், மகாபத்திரம், செவ்வரத்தை, கடம்பு, புன்னாகம், வேஜிகம், பலகர்ணி, பத்ராமுஸலீ, பச்சிலை, ஜாதி, ரோஜா பவள மல்லிகை, பிச்சி மல்லிகை,லாந்தா மல்லிகை என்னும் தாவரங்களின் பூக்களாம். அர்த்தராத்தியில் மாத்திரம் தாழம்பூவை உபயோகிக்கலாம்.
ஏழுநாட்களில் விருத்தியடைந்த வால்நெல், கோதுமை, நீவாரம், நெல், மூங்கிலரிசி, மஞ்சாடி, பயறு, மொச்சை, இலாமிச்சை, உளுந்து என்னுமிவற்றின் முளைகளும் பூவுக்கொப்பாகும்

ஒரே வர்ணமுடைய புஷ்பங்களால் தனித்தனியாகக் கட்டப்பெற்ற மாலைகள், அநேக (நிற) வர்ணமுடைய புஷ்பங்களால் கட்டப்பட்ட மாலைகள், இலையும், பூவும் கலந்து கட்டப்பட்ட மாலைகள், இலைகளால் தனித்தனியாகக் கட்டப்பெற்ற மாலைகள் பூஜைக்கு மிகவுஞ் சிறந்தனவாகும் என ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

16. தூபத்திரவிய வகைகள் யாவை?

தூபத்திரவிய வகைகள் வருமாறு:- பச்சைக்கற்பூரம், அகில், சந்தனம், தக்கோலம், ஜாதிக்காய், இலவங்கம், குந்துருக்கம் கட்டிப் பிசின், ஜடாமாஞ்சை, முஸ்தா (கோரைக்கிழங்கு) என்னும் இவற்றின் சூர்ணத்தால் செய்யப்பெற்ற தூபத் திரவியம் யக்ஷகர்த்தமம் எனப்படும்.

அகில், இலவங்கம்,சந்தனம், பச்சைக்கற்பூரம், இலவங்கத் தோல், ஏலம், இலவங்க இலை, இலவங்க புஷ்பம், ஜடாமாஞ்சை குந்துருக்கம் கட்டிப் பிசின், என்னும் இவற்றின் சூர்ணத்தால் செய்யப்பெற்ற தூபத் திரவியம் பிராஜாபத்தியம் எனப்படும்.

சந்தனம், அகில், பச்சைக்கற்பூரம், கஸ்தூரி, இலவங்கப்பட்டை, குந்துருக்கும்பிசின், சர்க்கரை, கோரைக்கிழங்கு என்னும் இவற்றின் சூர்ணத்தால் செய்யப்பெற்ற தூபத் திரவியம் விஜயம் எனப்படும்.

பச்சைக்கற்பூரம், கறுப்பு நிற அகிற்கட்டை, குருவேர், குங்குமப்பூ, குந்துருக்கம் பிசின், துருஷ்கம் (கஸ்தூரி), தாமரைத்தண்டு, சந்தனப்பொடி ஆகியவை, ஐந்து பாகம் தேனுடன் சேர்க்கப்பட்ட சூர்ணத்தால் செய்யப்பெற்ற தூபத் திரவியம் சீதாம்சு எனப்படும்.

சந்தனம், அகில், பச்சைக்கற்பூரம், குந்துருக்கம்பிசின், கீழ் காய்நெல்லி, குங்கிலியம், கோரைக்கிழங்கு என்னும் இவற்றின் சூர்ணத்தால் செய்யப்பெற்ற தூபத் திரவியம் கலியாணம் எனப்படும்.

சந்தனம், அகில், கஸ்தூரி, கோரைக்கிழங்கு, குந்துருக்கம் பிசின் என்னும் இவற்றின் சூர்ணத்தால் செய்யப்பெற்ற தூபத் திரவியம் அமிர்தம் எனப்படும்.

தக்கோலம், கமுகம்பூ, பச்சைக்கற்பூரம், ஜாதிக்காய், இலவங்கம் என்னும் இவற்றின் இவற்றின் சூர்ணத்தால் செய்யப்பெற்ற தூபத் திரவியம் சுகந்தம் எனப்படும்.

ஒன்றும் கலவாத தனி குங்கிலியத் தூபம், தனி சந்தன தூபம், தனி சௌகந்திக தூபம், தனி கரிய நிற அகில் தூபம், தனி வெண்மையான அகில் தூபம்,,அரக்கும் கஸ்தூரியும் சேர்ந்த தூபம்,நெய்யும் குங்கிலியமும் சேர்ந்த தூபம். எருமை நெய்யும் குங்கிலியமும் சேர்ந்த தூபம் முதலிய தூபத்திரவிய வகைகள் உள்ளன.

17. நைவேத்தியத்திற்கு உகந்த அரிசி வகைகள் யாவை?

நைவேத்தியத்திற்கு விரீகி ( செந்நெல்லரிசி), சாலி (சம்பா நெல்லரிசி), பிரியங்கு (தானிய அரிசி) , நீவாரம் (வனநெல் அரிசி) , கோதுமை அரிசி, மூங்கில் அரிசி , வால்நெல் அரிசி முதலியவை பூஜைக்கு மிகவும் சிறந்தனவாகும்.

18. நைவேத்தியத்திற்கு பல்வேறு அன்ன வகைகள் செய்யும் முறை என்ன?

நைவேத்தியத்திற்கு பல்வேறு அன்ன வகைகள் செய்யும் முறைகள் வருமாறு:-

பாயச அன்னம். (பாயச சாதம்)
அரிசியின் நான்கில் ஒரு பங்கு அளவுப் பயறு, அதில் பாதிப் பங்கு சர்க்கரை, சில வாழைப்பழங்கள், சிறிது உப்பு இவற்றுடன் கூடினதாகப் பாயச அன்னத்தைச் செய்ய வேண்டும்.

எள் அன்னம்.(எள் சாதம்)
அரிசியின் நான்கின் ஒரு பங்கு அளவு எள்ளும், அந்த எள்ளின் பாதி அளவு நெய்யும் சிறிது உப்பும் கூடினதாக எள் அன்னத்தைச் செய்ய வேண்டும்.
சர்க்கரை அன்னம்( சர்க்கரைச் சாதம்)
அரிசியினும் இரண்டு மடங்கு அதிகமான பாலுடனும், அரிசியின் பாதி அளவுள்ள சருக்கரையுடனும், சர்க்கரையின் பாதியளவுள்ள நெய்யுடனும் நெய்யுடனும் கூடினதாகச் சர்க்கரை யன்னத்தைச் செய்ய வேண்டும்.
பயற்ற அன்னம்.
அரிசியின் நான்கின் ஒரு பங்கு அளவு பயறு, ஒரு தேங்காயுடனும் கூடினதாகச் பயற்ற அன்னத்தைச் செய்ய வேண்டும்.
சுண்டல்
கடலை,பயறு, துவரை, உழுந்து, காறாமணிக் கடலை, மொச்சை, கொள்ளு என்னும் இவற்றுள் ஒன்றால் (சுண்டல்) செய்யபடல் வேண்டும்.
காய்கறி
நைவேத்தியத்திற்கு காய்கறிகளாக வாழைக்காய், பலாக்காய், பூசணிக்காய், வெள்ளரிக்காய், பாவற்காய், கண்டங்கத்திரிக்காய், புடலங்காய், மாங்காய், தேங்காய்,சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கருணைக் கிழங்கு ஆகியவற்றுடன் மிளகு, சீரகம், ஏலம், உப்பு என்னும் இவற்றைப் பொடி செய்து சேர்த்துக் கலந்து நெய்யினால் வறுத்து காய்கறி செய்யப்படல் வேண்டும்.
குழம்பு
புளிப்பாகும்,மோர்,உப்பு,மிளகு,சீரகம்,கொள்ளு,கடுகு என்னும் இவற்றைப் பொடி செய்து சேர்த்துக் கலந்து குழம்பு செய்யப்படல் வேண்டும்.
அப்பம், வடை ,பானகம்
உளுந்து, பயறு,கோதுமை, அரிசிமா என்னுமிவற்றால் செய்யப்பட்டவையாயும், பூரணமான சருக்கரையுடன் கூடினவையாயும், பச்சைக்கற்பூரம் ஏலம் ஆகியவற்றின் பொடிகளால் அநேக அப்பம், வடை, பானகம் முதலியவற்றையும் செய்து கொள்ளல் வேண்டும்.

19. பதினாறு உபசாரங்கள் வகைகள் யாவை?

பதினாறு உபசாரங்கள் பின்வருமாறு :-

| | | | |
|---|---|---|---|
| 1. ஆசனம் | 5. அர்க்கியம் | 9. புஷ்பம் | 13. தீபம் |
| 2. ஆவாகனம் | 6. அபிஷேகம் | 10. நைவேத்தியம் | 14. ஆரத்தி |
| 3. பாத்தியம் | 7. ஆடைதரித்தல் | 11. தாம்பூலம் | 15. பஸ்மம் |
| 4. ஆசமனம் | 8. சந்தனம் | 12. தூபம் | 16. பிரதக்ஷிணம் |

20. ஐந்து உபசாரங்கள் வகைகள் யாவை?

**ஐந்து உபசாரங்கள் வகைகள் பின்வருமாறு:-**
பஞ்ச(ஐந்து) பூதங்கள் (பிருதிவி, அப்பு, அக்கினி,வாயு, ஆகாசம்) தொடர்பான ஐந்து உபசாரங்கள் பின்வருமாறு :-
1. பிருதிவி தொடர்பான உபசாரம்:- சந்தனம், புஷ்பம், கிழங்கு, வேர், பழம் முதலியன.
2. அப்பு தொடர்பான உபசாரம்:- ஜலம், பால், ஆடை, தயிர், கோஜல முதலியன.
3. அக்கினி தொடர்பான உபசாரம்:- சுவர்ணம், இரத்தினம், தீபம், ஆபரணம் முதலியன.
4. வாயு தொடர்பான உபசாரம்:- சாமரம், தூபம், விசிறி, ஓலை விசிறி முதலியன.
5. ஆகாச தொடர்பான உபசாரம்:- கானஞ்செய்தற்குரிய வாத்தியம்,

*21.* **ஆலயங்களில் பூஜையின் போது இசைக்கப்படும்** ராகங்கள் என்ன?

**ஆலயங்களில் பூஜையின் போது இசைக்கப்படும்** ராகங்கள் **பின்வருமாறு:-**

| | | |
|---|---|---|
| ***1.திருப்பள்ளி எழுச்சி-பூபாளம்*** | ***3.உச்சிக்காலம்-த்தியமாவதி*** | ***5. இரண்டாங்காலம்- ஆனந்த பைரவி*** |
| ***2.காலைசந்தி- மலய மாருதம்*** | ***4. சாயரட்சை -பூரிகல்யாணி*** | ***6. அர்த்த சாமம் - நீலாம்பரி*** |

22. கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் முக்கிய கிரியைகள் என்ன?

கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் முக்கிய கிரியைகள பின்வருமாறு:-

1. அனுக்ஞை: கும்பாபிஷேகக் கிரியைகளை முன்னின்று நடத்துவதற்கு இறைவன் அனுமதி பெற்று பிரதம ஆச்சாரியரை நியமனஞ் செய்தல்.

2. கணபதி பூஜை; கும்பாபிஷேகக் கிரியைகள் அனைத்தும் எவ்வித குறைபாடுகளும் இன்றி நிறைவேற விநாயகரை வழிபடல்.

3. வாஸ்து சாந்தி; கும்பாபிஷேகக் கிரியைகளுக்கும் அக்கிரியைகளைச் செய்பவர்களுக்கும் எவ்வித இடையூறுகளும் வராமல் பாதுகாப்பதற்காக வாஸ்து தேவதையை வழிபாடு செய்தல்.

4. மிருத்சங்கிரகணம் எனப்படும் மண்எடுத்தல்; அஷ்டதிக்குப் பாலகர்களிடம் அனுமதிபெற்று, புனிதமான இடத்திலிருந்து மண்எடுத்து, அப்பள்ளத்தில் அபிஷேகம் செய்தல்.

5. அங்குரார்ப்பணம் எனப்படும் முளையிடுதல்; மண்பாலிகைகளில் வித்துகளை விதைத்து முளை வளரச் செய்தல்.

6. ரக்ஷாபந்தனம் எனப்படும் காப்புக் கட்டுதல்: கிரியைகளைச் செய்யும் ஆச்சாரியருக்கு இடையூறுகள் ஏற்படாமல் காக்கும் வகையில் ஆச்சாரியர் கையில் மந்திர பூர்வமாக மஞ்சள் கயிறு (காப்பு) கட்டுதல்.

7. கடஸ்தாபனம்: குடங்களில் கும்பங்களை தாபித்தல்

8. கலாகர்ஷணம் எனப்படும் கலைகளை இருத்துதல்; எந்தெந்த மூர்த்திகளை எந்தெந்த குடத்தில் ஆவாகணம் செய்கிறோமோ, அந்தந்த மூர்த்திகள் அந்தந்தக்குடங்களில் இருப்பதாகப் பாவனை செய்து வழிபாடு செய்தல்.

9. யாக சாலை : ஹோமத்துக்கென நிர்ணயிக்கப்பட்ட முறையில் ஆச்சாரியாருடைய வழிகாட்டலில் யாகசாலைகளை விதிப்படி நிர்மானித்தல்.

10. பிம்ப சுத்தி: பிரதிஷ்டக்குரிய மூர்த்தங்களின், அசுத்தங்களை முறைப்படி அகற்றி புனிதமாக்கும் கிரியையாகும்.

11. ஸ்பர்சாகுதி: யாகசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கும்பத்துக்கும் மூலத் திருமேனிக்கும் தர்ப்பைக் கயிறால் ஏற்படுத்தப்படும் இணைப்பாகும்.

அஷ்டபந்தனம்: குறிப்பிடப்பட்ட எட்டுப் பொருட்களை இடித்துப் பெறப்பட்ட மருந்தினால் மூர்த்தியைப் பீடத்துடன் ஒன்று சேர்த்துஇணைப்பதாகும்.

23. அறுபத்து நான்கு சிவ மூர்த்தங்கள் யாவை?

அறுபத்து நான்கு சிவ மூர்த்தங்கள பின்வறுமாறு:-

1) இலிங்கமூர்த்தி
2) இலிங்கோற்பவ மூர்த்தி
3) முகலிங்க மூர்த்தி
4) சதாசிவ மூர்த்தி
5) மகாசதாசிவ மூர்த்தி
6) உமா மகேஸ்வர மூர்த்தி
7) சுகாசன மூர்த்தி
8) உமேசமூர்த்தி
9) சோமஸ்கந்த மூர்த்தி
10) சந்திரசேகர மூர்த்தி
11) இடபாரூட மூர்த்தி
12) இடபாந்திக மூர்த்தி
13) புஜங்கலலித மூர்த்தி
14) புஜங்கத்ராச மூர்த்தி
15) சந்தியா நிருத்த மூர்த்தி
16) சதா நிருத்த மூர்த்தி
17) சண்ட தாண்டவ மூர்த்தி
18) கங்காதர மூர்த்தி
19) கங்காவிசர்ஜன மூர்த்தி
20) திரிபுராந்தக மூர்த்தி
21) கல்யாண சுந்தர மூர்த்தி
22) அர்த்தநாரீஸ்வரமூர்த்தி
23) கஜயுத்த மூர்த்தி
24) ஜுவராபக்ன மூர்த்தி
25) சார்த்தூலஹர மூர்த்தி
26) பாசுபதி மூர்த்தி
27) கங்காள மூர்த்தி
28) கேசவார்த்த மூர்த்தி
29) பிக்ஷாடன மூர்த்தி
30) சிம்ஹக்ன மூர்த்தி
31) சண்டேசுரஅனுக்கிரக மூர்த்தி
32) தக்ஷிணா மூர்த்தி
33) யோக தக்ஷிணா மூர்த்தி
34) வீணா தக்ஷிண மூர்த்தி
35) காலாந்தக மூர்த்தி
36) காமதகன மூர்த்தி
37) லகுளேசுவர மூர்த்தி
38) பைரவ மூர்த்தி
39) ஆபதோத்தாரணமூர்த்தி
40) வடுக மூர்த்தி
41) க்ஷேத்திர பாலக மூர்த்தி
42) வீரபத்திர மூர்த்தி
43) அகோர அஸ்திர மூர்த்தி
44) தக்ஷயக்ஞஹத மூர்த்தி
45) கிராத மூர்த்தி
46) குரு மூர்த்தி
47) அஸ்வாரூட மூர்த்தி
48) கஜாந்திக மூர்த்தி

49) ஜலந்தரவத மூர்த்தி
50) ஏகபாத திரி மூர்த்தி
51) திரிபாத திரி மூர்த்தி
52) ஏகபாத மூர்த்தி
53) கௌரீவரப்த மூர்த்தி
54) சக்கரதானஸ்வருப மூர்த்தி
55) கௌரீலீலாசமன்வித மூர்த்தி
56) விஷாபஹரண மூர்த்தி
57) கருடாந்தக மூர்த்தி
58) பிரம்ம சிரச்சேத மூர்த்தி
59) கூர்மசம்ஹார மூர்த்தி
60) மச்ச சம்ஹார மூர்த்தி
61) வராக சம்ஹார மூர்த்தி
62) பிரார்த்தனா மூர்த்தி
63) ரக்தமிஷாபிரதான மூர்த்தி
64) சிஷ்யபாவ மூர்த்தி

24. அறுபத்து மூன்று நாயன்மார்கள் பற்றிய விபரங்களைத் தருக?

சிவனருள் பெற்ற அறுபத்து மூன்று நாயன்மார்கள் பற்றிய விபரங்கள் பின்வறுமாறு:-

| எண் | நாயன்மார் பெயர் | ஊர் | பிறந்த மாதம் | நக்ஷத்திரம் |
|---|---|---|---|---|
| 1. | அதிபத்த நாயனார் | நாகப்பட்டினம் | ஆவணி | ஆயில்யம் |
| 2. | அப்பூதியடிகள் | திங்களூர் | தை | சதயம் |
| 3. | அமர்நீதி நாயனார் | பழையாறை | ஆனி | பூரம் |
| 4. | அரிவாட்டாய நாயனார் | கணமங்கலம் | தை | திருவாதிரை |
| 5. | ஆனாய நாயனார் | மங்கலவூர் | கார்த்திகை | அஸ்தம் |
| 6. | இசைஞானியார் | சித்திரை | சித்திரை | |
| 7. | இடங்கழி நாயனார் | கொடும்பாளூர் | ஐப்பசி | கார்த்திகை |
| 8. | இயற்பகை நாயனார் | காவிரிப்பூம்பட்டினம் | மார்கழி | உத்திரம் |
| 9. | இளையான்குடி மாற நாயனார் | இளையான்குடி | ஆவணி | மகம் |
| 10. | உருத்திரபசுபதி நாயனார் | திருத்தலையூர் | புரட்டாசி | அசுவினி |
| 11. | எறிபத்த நாயனார் | கருவூர் | மாசி | அஸ்தம் |
| 12. | ஏயர்கோன் கலிக்காம நாயனார் | திருப்பெருமங்கலம் | ஆனி | ரேவதி |
| 13. | ஏனாதிநாத நாயனார் | எயினனூர் | புரட்டாசி | உத்திராடம் |
| 14. | ஐயடிகள் காடவர்கோன் நாயனார் | காஞ்சீபுரம் | ஐப்பசி | மூலம் |
| 15. | கணநாத நாயனார் | சீர்காழி | பங்குனி | திருவாதிரை |
| 16. | கணம்புல்ல நாயனார் | இருக்குவேளூர் | கார்த்திகை | கார்த்திகை |
| 17. | கண்ணப்ப நாயனார் | உடுப்பூர் | தை | மிருகசீரிடம் |
| 18. | கலிகம்ப நாயனார் | திருப்பெண்ணாகடம் | தை | ரேவதி |
| 19. | கலிய நாயனார் செக்கார் | திருவொற்றியூர் | ஆடி | கேட்டை |
| 20. | கழறிற்றறிவார் நாயனார்(சேரமான் பெருமான் நாயனார்) | கொடுங்கோலூர் | ஆடி | ஸ்வாதி |
| 21. | கழற்சிங்க நாயனார் | .................... | வைகாசி | பரணி |
| 22. | காரி நாயனார் | திருக்கடவூர் | மாசி | பூராடம் |
| 23. | காரைக்கால் அம்மையார் | ாரைக்கால் | பங்குனி | ஸ்வாதி |
| 24. | குங்குலியக்கலைய நாயனார் | திருக்கடவூர் | ஆவணி | மூலம் |
| 25. | குலச்சிறை நாயனார் | மணங்மேற்குடி | மாசி | அனுஷம் |
| 26. | கூற்றுவ நாயனார் | களந்தை | ஆடி | திருவாதிரை |
| 27. | கோட்செங்கட்சோழ நாயனார் | ......................... | மாசி | சதயம் |
| 28. | கோட்புலி நாயனார் | நாட்டியத்தான்குடி | ஆடி | கேட்டை |
| 29. | சடைய நாயனார் | திருநாவலூர் | மார்கழி | திருவாதிரை |
| 30. | சண்டேச்சுவர நாயனார் | திருச்சேய்ஞலூர் | தை | உத்திரம் |
| 31. | சக்தி நாயனார் | வரிஞ்சியூர் | ஐப்பசி | பூசம் |
| 32. | சாக்கிய நாயனார் | திருசங்கமங்கை | மார்கழி | பூராடம் |
| 33. | சிறப்புலி நாயனார் | திருஆக்கூர் | கார்த்திகை | பூராடம் |
| 34. | சிறுத்தொண்ட நாயனார் | திருச்செங்காட்டாங்குடி | சித்திரை | பரணி |
| 35. | சுந்தரமூர்த்தி நாயனார் | திருநாவலூர் | ஆடி | ஸ்வாதி |
| 36. | செருத்துணை நாயனார் | தஞ்சாவூர் | ஆவணி | பூசம் |
| 37. | சோமாசி மாற நாயனார் | திருஅம்பர் | வைகாசி | ஆயில்யம் |
| 38. | தண்டியடிகள் நாயனார் | திருவாரூர் | பங்குனி | சதயம் |
| 39. | திருக்குறிப்பு தொண்ட நாயனார் | திருவாரூர் | பங்குனி | சதயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருஞானசம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள் | சீர்காழி | வைகாசி | மூலம் |
| 41. | திருநாவுக்கரசு நாயனார் | திருவாமூர் | சித்திரை | சதயம் |
| 42. | திருநாளைப்போவார் நாயனார்(நந்தனார்) | ஆதனூர் | புரட்டாசி | ரோஹிணி |
| 43. | திருநீலகண்ட நாயனார் | சிதம்பரம் | தை | விசாகம் |
| 44. | திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் | திருஎருக்கத்தம்புலியூர் | வைகாசி | மூலம் |
| 45. | திருநீலக்க நாயனார் | சாத்தமங்கை | வைகாசி | மூலம் |
| 46. | திருமூல நாயனார் | சாத்தனூர் | ஐப்பசி | அஸ்வினி |
| 47. | நமிந்தியடிகள் நாயனார்(சேக்கிழார்) | ஏமப்பேரூர் | வைகாசி | பூசம் |
| 48. | நரசிங்கமுனையரைய நாயனார் | ................. | புரட்டாசி | சதயம் |
| 49. | நின்ற சீர் நெடுமாற நாயனார் | மதுரை | ஐப்பசி | பரணி |
| 50- | நேச நாயனார் | காம்பீலி | பங்குனி | ரோஹிணி |
| 51. | புகழ்ச்சோழ நாயனார் | உறையூர் | ஆடி | கார்த்திகை |
| 52. | புகழ்த்துணை நாயனார் | ஸ்ரீவிலிபுத்தூர் | ஆவணி | ஆயில்யம் |
| 53. | பூசலார் நாயனார் | திருநின்றவூர் | ஐப்பசி | அனுஷம் |
| 54. | பெருமிழலை குறும்ப நாயனார் | பெருமிழலை | ஆடி | சித்திரை |
| 55. | மங்கையர்கரசியார் | மதுரை | சித்திரை | ரோஹிணி |
| 56. | மானக்கஞ்சாற நாயனார் | கஞ்சாரூர் | கார்த்திகை | மூலம் |
| 57. | முருக நாயனார் | திருப்புகலூர் | வைகாசி | மூலம் |
| 58. | முனையடுவார் நாயனார் | திரநீ^ர் | பங்குனி | பூசம் |
| 59. | மூர்க்க நாயனார் | திருவேற்காடு | கார்த்திகை | மூலம் |
| 60. | மூர்த்தி நாயனார் | மதுரை | ஆடி | கார்த்திகை |
| 61. | மெய்பொருள் நாயனார் | திருகோவிலூர் | கார்த்திகை | உத்திரம் |
| 62. | வாயிலார் நாயனார் | திருமயிலை | மார்கழி | ரேவதி |
| 63. | விறன்மிண்ட நாயனார் | செங்குன்றூர் | சித்திரை | மிருகசீரிடம் |

25. அறுபத்து நான்கு பைரவ கோலங்களும் அவர்களுக்குரிய சக்திகளும் என்ன?

அறுபத்து நான்கு பைரவ கோலங்களும் அவர்களுக்குரிய சக்திகளும் பின்வறுமாறு:-

1. அசிதாங்கர் - திவ்விய யோகி
2. விசாலாட்சர் - மகாயோகி
3. மார்த்தாண்டர் - சித்தயோகி
4. மோதகப்பிரியர் - கணேசுவரி
5. சுவச்சந்தர் - பிரேதாசி பிகினி
6. விக்ன சந்து'டர் - தாளராத்திரி
7. கேசரர் - நிசாசரி
8. சைராசர் - ஜங்காரி
9. குரு - ஊர்த்துவ வேதாளி
10. குரோம்'டரர் - பிசாரி
11. சடாதரர் - பூதடாமரி
12. விஸ்வரூபர் - விருபாக்ீ
13. விருபாஷர் - விரூபாக்ஷி
14. நாதாரூபதரர் - சு'காங்கி
15. பரர் - நரபோஜனி
16 வஜ்ரஹஸ்தர் - ராக்சசி
17. மகாயாகர் - கோரரத்தாீ
18. சண்டர் - விஸ்வரூபி
19. பிரளயாந்தகர் - பயங்கரி
20. பூமிகம்பர் - வீரகௌமாரி
21. நீலகண்டர் - கீசண்டி
22. வி'ணு - வராகி
23. குலபாலகர் - முண்டதாரிணி
24. முண்டபாலர் - பிராமரி
25. காமபாலர் - ருத்தரவேதாணி
26. குரோதர் - பீ'கரி
27. பிங்கலேஷணர் - திரிபுராந்தகி
28. அப்ரரூபர் - பைரவி
29. தராபாலர் - துவம்சனி
30. குடிலர் - குரோரி
31. மந்திநாயகர் - துர்முகி
32. ருத்ரா - பிரேதவாகினி
33. பிதாமகர் - கட்வாங்கி
34. உன்மத்தர் - தீர்க்கலம்போ'டி
35. வடுகர் - மாலினி
36. சங்கரர் - மந்திரயோகினி
37. பூதவேதாள திரிநேத்ரா - காலாக்னி
38. திரிபுராந்தகர் - கிராமணி
39. வரதர் - சக்தி
40. பர்வதராசர் - கங்காளி
41. கபாலர் - புவனேஸ்வரி
42. சசிபூ'ணர் - பட்காரி

43. ஹஸ்திசர்மாம்பரதரர்- வீரபத்ரேசி
44. யோகீசர் - தும்ராரீ
45. பிரும்மராட்சர் - கலகப் பிரியா
46. சர்வக்ஞர் - கண்டகி
47. சர்வதேவேசர் - நாடகி
48. சர்வ பூதஹருதிஸ்தர்- மாரி
49. பி'ணாக்கியர் - யமதூதி
50. பயகரர் - கராளினி
51. சர்வக்ஞர் - கௌசகி
52. காலாக்கினி - மர்த்தனி
53. மகாரௌத்திரர் - யஷி

54. தஷிணர் - ரோமஜங்கி
55. முஹரோஸ்திரர் - பிரஹாரிணி
56. சம்ஹாரர் - சகஸ்ராஷி
57. அதிரிகதர் - காமலோலா
58. அங்கர் - காகதமி'டரி
59. காலாக்னி - அதோமுகி
60. பிரியங்கரர் - துர்ச்சடி
61. கோரநாதர் - விகடி
62. மகாவிசாலாட்சர் - கேசீ
63. யோகீசர் - கபாலி
64. தஷசம்ஸ்கிரர் - வி'ாலங்கினி

26. பூஜை வழிபாட்டில் பயன்படும் பழங்களின் என்ன?

பொதுவாக இந்து ஆலயங்களில் தெய்வீக மூர்த்திகளுக்கு பூஜை வழிபாட்டில நிவேதனமாகவும், அபிஷேகப் பழத் திரவியங்களாகவும் பயன்படும் பழங்கள் பற்றிய விபரங்கள் பின்வறுமாறு:-

1. *இதரை வாழை*-**Musa paradisiaca**
2. *ஆனைவாழை*-**Musa sapientium**
3. *மா*-**Mangifera indica**
4. *திராட்சை (கொடிமுந்திரிகை)*-**Vitis vinifera**
5. *பம்பளிமாசு (ஜம்போல)*-**Citrus grandis**
6. *அன்னாசி* -**Ananas cosmosus**
7. *பப்பாசி*-**Carica papaya**
8. *மரமுந்திரிகை(கஜு)*-**Anacardium occidentales**
9. *தோடை (சாத்துக்குடி)*-**citrus aurantium**
10. *சப்போட்டா (சப்படில்லா)*-**Achras zapota**
11. *மாதுளை* -**Punica granatum**
12. *தோடை (கமலத்தோடை)*-**Citrus rerticulata**
13. *பேரீச்சை*-**Phoenix dactylifera**
14. *சீதாப்பழம் (முள் அனோதா)*-**Anona muricata**
15. *ராம்சீதா அனோதை*-**Anona reticulata**
16. *சித்திர அனோதை*-**Anona squamosa**
17. *இலந்தை*-**Zizyphus jujuba**
18. *கொய்யா*-**Psidium guyava**
19. *அப்பிள்*-**Pyrus malus**
20. *அத்தி*-**Ficus pumila**
21. *பேரிக்காய்*-**Pears**
22. *வில்வம்* -**Aegle marmelos**
23. *விளா* -**Limonia acidissima**
24. *நெல்லி*-**Phyllanthus embilica**
25. *அருநெல்லி*-**Phyllathus acilus**
26. *பலா* -**Artocarpus integra**
27. *எலுமிச்சை*-**Citrus aurantifolia**
28. *பெருநாவல்*-**Eugenia jambolana**
29. *நாவல்* -**Syzygium cuminii**
30. *நாரத்தை*-**Citrus limonum**
31. *மங்குஸ்தீன்*-**Garcinia mangostana**
32. *ஸ்ரோபெரி* **(Strawberry)-Fragaria vesca**
34. *கொடித்தோடை*-**Passiflora foetida**
35. *மூலாம்பழமரம்* **(Aatvmetum)-Citrullus ranat··s**
36. *மவேலயன் ஜம்பு*-**Syzygium malaccense**
37. *பீச்* -**Prenus persica**
38. *டூரியன்பழம்*- **(durain) Duriozibethimuf**
39. *லொவி*-**Flacourtia inermis**
40. *தாமரங்கா*- **Averrhoa Caramvola**

